1967 ஜூலை 8]

திரு. எ. பாலசுப்பிரமணியன் : திருக்கோவில்கள், திருவிழாக்கள் பற்றி விளம்பரம் செய்வது, பிரசாரம் செய்வது இவற்றை சர்க்கார் ஏற்று நடத்துவதென்றால், சமயப்பற்றற்ற கொள்கைக்கு விரோதமானது என்று ஆட்சி கருதவில்லையா? அப்படிக் கருதினால், அதன் மீது என்ன யோசனை செய்யும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலே தெரிவித்தபடி, இதெல்லாம் அரசாங்கத்தின் பணத்திலிருந்து செய்யப்படவில்லை. கோவில்களின் வருமானத்தில் மிச்சம் ஏற்படுவதிலிருந்து செய்யப்படுகிறது.

திரு. கே. வினாயகம் : சபாநாயகர் அவர்களே, இந்தப் படம் எங்கே காட்டப்படுகிறது? அமெரிக்காவிலே, ரஷ்யாவிலே காட்டப்படுகிறதா? வடநாட்டிலே காட்டப்படுகிறதா? தென்னாட்டிலே காட்டியதாகத் தெரியவில்லையே? எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : படம் எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. அதைப் பார்க்க விரும்பினால், ஏற்பாடு செய்யலாம். கண்காட்சி முதலியவற்றில் காட்டலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் பதினொரு வினாக்கள் இருக்கின்றன. திரு. கோதண்டராமன் அவர்கள்தான், அதிகமாக வினாக்கள் கேட்டுள்ளார்ள். அவரே இன்னொரு துணை வினா கேட்க விரும்புகிறார்களா? சரி.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்தப் படத்திலே பணக்கார சாமி குடியிருக்கக்கூடிய கோவில்களை மட்டும்தான் எடுத்திருப்பதாகச் சொல்லப்படுவது உண்மையா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்தப் படத்தை நானே இன்னும் பார்க்கவில்லை. என்னென்ன வந்திருக்கின்றன, எப்படியெப்படி இருக்கின்றன என்பது தெரியவில்லை. குறிப்பாகப் பெரிய கோவில்களிலே உள்ள கலைச்சிறப்பு மிக்கதும், கண்கவர்ச்சி மிகவும் அதிகமாக உள்ளதும், பொது மக்கள் கூடுகின்ற திருவிழாக்களும் எடுக்கப்பட்டிருக்கும் என்று கருதப்படுகிறது. அந்த வகையில்தான் அது எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ம. பொ. சிவஞானம் : தலைவரவர்களே, தமிழ்நாட்டுக் கோவில்களிலே சமரச சுத்த சன்மார்க்க சங்கத்துடன் சர்வ சமயமும் ஒன்று என்று அமைந்துள்ள வடலூர் சத்திய ஞான சபைக் கோவிலையும் இந்தப் படத்தில் சேர்த்து எடுக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலேயே சொல்லியபடி நானே அந்தப் படத்தைப் பார்க்கவில்லை. அது பற்றிய விவரம் இல்லை.